**PRIMARY SCHOOL**

**SEMESTRAL ASSESSMENT 1 - 2014**

**HIGHER MOTHER TONGUE – TAMIL**

**PRIMARY 6 HMT**

Name: ______________________

Class: ______________________

Marks /40

Duration: 50 mins

## கட்டுரை

இப்பிரிவில் இரண்டு தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும் வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும் கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்து எடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

1. உன்னை மிகவும் அச்சுறுத்திய ஒரு சம்பவத்தைப் பற்றி எழுது.

2. சமூக மன்றத்தின் அரங்கில் பலர் உட்கார்ந்து இருந்தார்கள். எல்லாரும் ஆவலுடன் நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது ...........

MORE TESTPAPERS AVAILABLE AT TESTPAPERSFREE.COM

உயர்தமிழ்

‘அ’ பிரிவு

**A1** <u>பிழை திருத்தம்</u> **(10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

செல்வந்தர் ஒருவருக்குத் தோட்டக் கலையில் மிகுந்த ஆர்வம் இருந்தது. அவரது மாளிகையைச் சுற்றிப் (Q1)<u>பெறிய</u> பூந்தோட்டத்தை அமைத்தார். அதில் பல வண்ணப் பூச்செடிகளை வளர்த்து (Q2)<u>வந்தன.</u> அவருடைய தோட்டத்தில் வேலை பார்த்தவனும் (Q3)<u>கடுமையாக</u> உழைப்பாளிதான். அதனால் செல்வந்தரின் பூந்தோட்டம் வனப்புடன் காணப்பட்டது. பல ஆண்டுகளுக்குப் பின் அந்தத் தோட்டக்காரன் வேலையிலிருந்து ஓய்வு (Q4)<u>பெறுகிறான்.</u> செல்வந்தர் புதிய தோட்டக்காரனை வேலையில் அமர்த்த செய்தித்தாளில் விளம்பரம் கொடுத்திருந்தார். வேலைக்கு விண்ணப்பம் செய்பவர்கள் அவர்கள் முன்பு வேலைபார்த்த போது அணிந்த உடைகளைக் (Q5)<u>எடுத்துக்கொன்டு</u> வர வேண்டும் என்றும் அவர் விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்தார். அதைப் படித்த அனைவருக்கும் வியப்பாக இருந்தது. ஒருவர் தமது வேலையில் எவ்வளவு கடினமாக உழைத்தார் என்பதைக் கண்டறியவே செல்வந்தர் அவ்வாறு விளம்பரம் அளித்திருந்தார்.

| | |
|---|---|
| (Q1) | |
| (Q2) | |
| (Q3) | |
| (Q4) | |
| (Q5) | |

A2 வாக்கியங்களை முடித்து எழுதுதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

(Q6) குட்டி இந்தியா வட்டாரத்தில் தீபாவளி ஒளியூட்டு விழா அமைச்சரால் துவங்கப்பட்டது.

அமைச்சர் தீபாவளி ஒளியூட்டு விழாவை____________________

______________________________________

(Q7) தொடக்கநிலை ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கான கருத்தரங்கு அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள கருத்தரங்கு____________________

______________________________________

(Q8) வசந்தம் பாடல் திறன் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் வசந்தம் தொலைக்காட்சி நிலையத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

வசந்தம் தொலைக்காட்சி நிலையத்தில் பதிவு செய்து கொண்டால்

______________________________________

(Q9) பொருளியல் மந்த நிலையினால் சிங்கப்பூரில் பல தொழிலாளர்கள் தங்கள் வேலைகளை இழந்தனர்.

பொருளியல் மந்த நிலையே சிங்கப்பூரில்____________________

______________________________________

A3 <u>வேற்றுமை உருபுகள்</u> **(8 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.**

விரைவுச்சாலையில் வாகனம் ஒன்று வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. திடீரென்று அந்த வாகனம் நேராகச் செல்லாமல் அங்கும் இங்குமாக சென்றது. (Q10)________________________ (வேகம்) குறைத்துவிட்டு வாகனத்தை நிறுத்தினார் இளங்கோ. கீழே இறங்கி ஒவ்வொரு சக்கரமாகப் பார்த்தார்.

முன் (Q11)________________________ (சக்கரம்) நான்கு நட்டுகளும் இல்லை. "நட்டுகள் கழன்று எங்கோ விழுந்துவிட்டனவே. நல்ல வேளை! சரியான நேரத்தில் வாகனத்தை நிறுத்தி, (Q12)________________________ (விபத்து) தப்பினேன்," என்று தனக்குள் நினைத்துக்கொண்டார்.

அடுத்த நகரம் இன்னும் சற்றுத் தொலைவில் இருந்தது. (Q13)________________________ (தன்) அவ்வளவு தூரம் வாகனத்தைத் தள்ளிச் செல்ல முடியாதே என்று எண்ணினார். அப்போது அவருக்கு நல்ல யோசனை ஒன்று தோன்றியது. மற்ற மூன்று சக்கரங்களிலிருந்து மொத்தம் மூன்று நட்டுகளை எடுத்து, கழன்ற சக்கரத்தில் மாட்டினார். பின் வாகனத்தில் ஏறி, மெதுவாக வாகனத்தைப் பக்கத்து ஊருக்கு ஓட்டிச் சென்றார்.

**B4 <u>கருத்தறிதல்</u> (8 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

அமெரிக்க நாட்டில் புகழ்பெற்ற பத்திரிக்கை நிறுவனம் ஒன்று இருந்தது. அந்நிறுவனத்தின் பொன் விழாவை முன்னிட்டு வாசகர்களுக்காக ஒரு போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (Q14)________________. போட்டியின் விவரங்கள் பத்திரிக்கையில் வெளியிடப்பட்டிருந்தன.

“உலகப் புகழ்பெற்ற ஓவியங்களின் கண்காட்சி நடந்து கொண்டிருக்கிறது. (Q15)________________. சில ஓவியங்களின் மதிப்பு பத்தாயிரம் வெள்ளிக்கும் மேல் இருக்கும். சில ஓவியங்களின் மதிப்பு ஐயாயிரம் வெள்ளிக்கும் மேல் இருக்கும். நீங்கள் ஓவியக் கண்காட்சியை ரசித்துக் கொண்டிருக்கும்போது, திடீரென்று அரங்கம் தீப்பற்றிக் கொள்கிறது. ஓவியங்கள் தீயில் நாசமாகின்றன.

(Q16)________________. நீங்களும் தப்பித்து ஓடும்போது, ஓர் ஓவியத்தையாவது காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கிறீர்கள். எந்த ஓவியத்தைக் காப்பாற்றுவீர்கள்?” இதுவே போட்டிக்கான கேள்வியாகும். இப்போட்டிக்குப் பல்லாயிரக்கணக்கான பதில்கள் வந்து குவிந்தன.

(Q17)________________. வெளியே செல்லும் வாயிலுக்கு அருகில் எந்த ஓவியம் உள்ளதோ, அந்த ஓவியத்தையே காப்பாற்றுவேன் என்று எழுதிய ராபர்ட் கிரேனுக்கே பத்து பொற்காசுகள் பரிசாக வழங்கப்பட்டன.

(1) பிரபல ஓவியர்களின் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

(2) சிலர் கூட்டத்தில் மாட்டிக்கொள்கின்றனர்.

(3) அவற்றுள் ஒரு விடை மட்டுமே பரிசு பெறும் தகுதி உடையது என்று முடிவுசெய்யப்பட்டது.

(4) வெற்றி பெறுபவருக்குப் பத்து பொற்காசுகள் பரிசாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

(5) சில விடைகள் மிகவும் சிறப்பாக இருந்தன.

(6) புகழ்பெற்ற ஓவியர்களும் அங்கு வந்திருந்தனர்.

(7) எல்லோரும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஓடுகிறார்கள்.

(8) சிறந்த பதிலுக்குத் தங்க நாணயம் அளிக்கப்படும்.

| வினா எண் | விடை |
|---|---|
| (Q14) | |
| (Q15) | |
| (Q16) | |
| (Q17) | |

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (26 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

மகிழபுரம் என்னும் நாட்டை மகிபாலன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய அரசவையில் சிங்கண்ணன் என்பவன் விகடகவியாக இருந்து மன்னனையும் அரசவையில் உள்ளவர்களையும் தனது பேச்சுத் திறமையால் மகிழ்வித்து வந்தான். அவன் எப்போதும் கலகலப்பாக இருப்பதோடு எல்லோரையும் சிந்திக்கவும் சிரிக்கவும் வைத்தான். மன்னனை எப்போதும் மகிழ்வித்து அவனிடமிருந்து ஏராளமான பரிசுகளைப் பெற்றுள்ளான்.

எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்கும் சிங்கண்ணன் ஒரு நாள் வாடிய முகத்துடன் அரசவைக்கு வந்தான். மன்னன் விகடகவியின் வாட்டத்துக்கான காரணத்தை வினவினார். சிங்கண்ணன் அழுதுகொண்டே, "மன்னா! நான் தங்களையும் என் குடும்பத்தையும் இன்னும் எத்தனை நாட்களுக்குப் பார்க்கப் போகிறேன் என்று தெரியவில்லை. நேற்று ஒரு சோதிடர் என் ஜாதகத்தைப் பார்த்தார். அவர் நான் விரைவில் இறந்துவிடப் போகிறேன் என்று கூறினார். நான் <u>மரித்துவிட்டால்</u> என் குடும்பத்தை யார் பார்த்துக்கொள்வார்கள்?" என்று வினவினான். அதற்கு மன்னன், "கவலைப்படாதே சிங்கண்ணா. சோதிடர் சொன்னது போல் நடக்காது. அப்படி நடந்துவிட்டால், நான் உன் குடும்பத்தைப் பார்த்துக்கொள்கிறேன்," என்று ஆறுதல் கூறினார். விகடகவியோ, "பணக்காரர்களை நம்பக்கூடாது என்று சொல்வார்களே. நான் எப்படி உங்களை நம்புவது?" என்று பதிலுக்குக் கேட்டான். மன்னன் தான் மற்றவர்கள் போல் இல்லை எனவும் தன்னை நம்பலாம் என்றும் உறுதி அளித்தார்.

அன்று அரசவையிலிருந்து சென்ற சிங்கண்ணன் மீண்டும் வரவேயில்லை. அவன் இறந்துவிட்டதாகச் செய்தி மட்டும் வந்தது. மனம் <u>கலங்கிய</u> மன்னன், அவனது குடும்பத்துக்கு உதவ எண்ணினார். ஆனால் அருகில் இருந்த மந்திரிகளோ தந்திரமாக, "மன்னா! தாங்கள்

சிங்கண்ணனுக்கு அளித்த பரிசுகள் யாவும் அவன் வீட்டில் உள்ளன. அதைக் கொண்டு வந்து நமது பணத்துடன் சேர்த்துவிடலாம். மாதா மாதம் அவனது குடும்பத்துக்கு ஒரு தொகையை வழங்கலாம்," என்று யோசனை கூறினர். அமைச்சர்கள் கூறியதற்கு மன்னனும் சம்மதித்தான்.

வீரர்கள் விகடகவியின் வீட்டுக்குச் சென்றனர். சிங்கண்ணன் பரிசுகளை வைத்திருந்த ஒரு பெட்டியைத் தூக்கி வந்தனர். அரசவையில் அப்பெட்டி வைக்கப்பட்டது. வீரர்கள் அப்பெட்டியைச் சிரமப்பட்டே திறந்தனர். என்ன ஆச்சரியம்! பெட்டியிலிருந்து சிங்கண்ணன் வெளியே வந்தான். அவன் மன்னனைப் பார்த்து, "மன்னா! நான் சொன்னது பலித்துவிட்டது. பணக்காரர்களை நம்பக்கூடாது தானே? நீங்கள் நல்லவர்தான். உங்களுக்கு அறிவுரை கூறுவோர் தான் சரியில்லை," என்று சொன்னான். மன்னன் வெட்கத்தால் தலை குனிந்தான்.

வினாக்கள்:

(Q18) சிங்கண்ணன் எக்காரணங்களால் விகடகவியாகத் திகழ்ந்தான்?

(3 மதிப்பெண்கள்)

____________________

____________________

____________________

____________________

(Q19) எதனால் சிங்கண்ணன் கவலையாக உள்ளதாகக் கூறினான்?

(4 மதிப்பெண்கள்)

____________________

____________________

____________________

____________________

(Q20) மன்னன் என்னென்ன கூறிச் சிங்கண்ணனின் கவலையைப் போக்கினார்? (4 மதிப்பெண்கள்)

(Q21) அமைச்சர்களின் சூழ்ச்சி என்ன? (4 மதிப்பெண்கள்)

(Q22) வீரர்கள் பெட்டியைத் திறக்கச் சிரமப்பட்டது ஏன்? (3 மதிப்பெண்கள்)

(Q23) சிங்கண்ணன் இவ்வாறு நாடகமாடக் காரணம் என்ன?

(4 மதிப்பெண்கள்)

___

___

___

___

Q24. பொருள் எழுது (4 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.**

அ. மரித்துவிட்டால் - ___ (2 மதிப்பெண்கள்)

ஆ. கலங்கிய - ___ (2 மதிப்பெண்கள்)

(முற்றும்)

PRIMARY SCHOOL

**P6 HIGHER TAMIL**

**ANSWER KEY**

(Q1) பெரிய

(Q2) வந்தார்

(Q3) கடுமையான

(Q4) பெற்றான்

(Q5) எடுத்துக்கொண்டு

(Q6) குட்டி இந்தியா வட்டாரத்தில் துவங்கி வைத்தார்.

(Q7) தொடக்கநிலை ஆறாம் வகுப்பு மாணவர்களுக்காக நடத்தப்படுகிறது.

(Q8) வசந்தம் பாடல் திறன் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

(Q9) பல தொழிலாளர்கள் தங்கள் வேலைகளை இழக்கக் காரணமாகும்.

(Q10) வேகத்தை

(Q11) சக்கரத்தில்

(Q12) விபத்திலிருந்து

(Q13) தன்னால்

(Q14) 4

(Q15) 1

(Q16) 2

(Q17) 3

(Q18) சிங்கண்ணன் அவனது பேச்சுத் திறமையாலும், எப்போதும் கலகலப்பாக இருப்பதாலும், எல்லோரையும் சிந்திக்கவும் சிரிக்கவும் வைத்ததாலும் விகடகவியாகத் திகழ்ந்தான்.

(Q19) சோதிடர் அவனது ஜாதகத்தைப் பார்த்து அவன் விரைவில்

இறந்துவிடப் போவதாகக் கூறினார். அவன் இறந்துவிட்டால் அவனது குடும்பத்தை யார் பார்த்துக் கொள்வார்கள் என்பதனால் அவன் கவலையாக உள்ளதாகக் கூறினான்.

(Q20) மன்னன் அவனது குடும்பத்தைப் பார்த்துக்கொள்வதாக கூறினார். மேலும் தான் மற்றப் பணக்காரர்கள் போல் இல்லை எனவும் தன்னை நம்பலாம் என்றும் உறுதி அளித்தார். இவ்வாறு கூறியே மன்னன் சிங்கண்ணனின் கவலையைப் போக்கினார்.

(Q21) மன்னன் சிங்கண்ணனுக்கு அளித்த பரிசுகள் யாவும் அவன் வீட்டில் உள்ளதாகவும் அதைக் கொண்டு வந்து அரசின் பணத்துடன் சேர்த்துவிட்டு மாதா மாதம் அவனது குடும்பத்துக்கு ஒரு தொகையை வழங்கலாம் என்பதே அமைச்சர்களின் சூழ்ச்சி ஆகும்.

(Q22) பெட்டியில் சிங்கண்ணன் மறைந்து இருந்ததனாலேயே வீரர்கள் பெட்டியைத் திறக்கச் சிரமப்பட்டதன் காரணமாகும்.

(Q23) பணக்காரர்களை நம்பக் கூடாது என்று தான் கூறியதை நிரூபிக்கவும், மன்னருக்கு அறிவுரை கூறுவோர் சரியில்லை என்பதை எடுத்துக்காட்டவுமே சிங்கண்ணன் இவ்வாறு நாடகமாடக் காரணம் ஆகும்.

(Q24) அ. மரித்துவிட்டால்

ஆ. வருந்திய